SOSA-I-M

# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஏழு

நேரம்: 2 மணி

---

I. **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. நெறி என்னும் சொல்லின் பொருள் ________________

   அ) குறிக்கோள் ஆ) கொள்கை இ) அறம்

2. வானில் ________________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

   அ) அகில் ஆ) முகில் இ) துகில்

3. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று ________________

   அ) இந்தி ஆ) ஆங்கிலம் இ) தெலுங்கு

4. வாழை கன்றை ________________

   அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) தந்தது

5. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________________

   அ) பச்சைக்காய் ஆ) கோலிக்குண்டு இ) செங்காய்

6. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ________________

   அ) முண்டந்துறை ஆ) வேடந்தாங்கல் இ) கோடியக்கரை

7. மகரக் குறுக்கம் இடம் பெறாத சொல் ________________

   அ) மருண்ம் ஆ) பழம் விழுந்தது இ) பணம் கிடைத்தது

8. ________________ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

   அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன் இ) பொறாமை உள்ளவன்

9. ஊர்வலத்தின் முன்னால் ________________ அசைந்து வந்தது.

   அ) தோரணம் ஆ) வாரணம் இ) வானரம்

10. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் ________________

    அ) நேதாஜி ஆ) இராஜாஜி இ) நேருஜி

## II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 × 2 = 8

11. சொல் பொருள் தருக.

அ) முகில் ஆ) கொம்பு இ) கமுகு

12. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

அ) முப்பால் ஆ) ஐம்பொறிகள்

13. கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.

பாவக்காயும் வெண்டக்காயும் ஒடம்புக்கு நல்லது.

14. கீழ்க்காணும் ஊர்களுக்குரிய மரூஉச் சொற்களைக் கண்டறிக.

அ) புதுக்கோட்டை ஆ) உதகமண்டலம்

15. கலைச்சொல் தருக.

அ) courage ஆ) Island

16. எழுத்துப் பிழைகளை நீக்குக.

பூணைக்கு இறவில் கன் நன்றாகத் தெரியும்.

## III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 × 2 = 10

17. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
18. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
19. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
20. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
21. எப்போது தன் நெஞ்சே தன்னை வருத்தும்?
22. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.
23. முத்துராமலிங்கத் தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

## IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 × 3 = 9

24. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
25. பேச்சுமொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.
26. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
27. தன் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
28. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

**V. மனப்பாடப் பகுதி.** **4 + 2 = 6**

29. ‘சிற்றில்’ - எனத் தொடங்கும் ‘புலி தங்கிய குகை’ பாடலை எழுதுக.

30. ‘வாய்மை’ - எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**VI. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4 × 2 = 8**

31. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

32. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?

33. மகரக் குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

34. வழக்கு என்றால் என்ன?

35. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

**VII. பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க.** **1 × 4 = 4**

36. அ) வீரர்கள் வீட்டைக் காத்தனர்.

ஆ) கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீன் கொடி பறந்தது.

இ) திருக்குறளை எழுதியவர் யார்?

ஈ) கபிலர் குறிஞ்சிப் பாட்டை எழுதிய புலவர்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**VIII. கடிதம்.** **1 × 5 = 5**

37. சுற்றுலாவில் கலந்து கொள்ள ஒப்புதலும், பணமும் கேட்டுத் தந்தைக்கு மடல் எழுதுக.